உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

குமரகுருபரன்

மலர் 17 | விசுவாவசு௵ மாசித் திங்கள் 1ம்௳ [12-2-66] | இதழ் 2

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 1)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

இக் காப்புச் செய்யுளின் விளக்கம் (சிதம்பரச் செய்யுட் கோவையின் ஒன்பதாவது பாடலாக நிற்றலால்) அதன் விளக்கத்துள் அமைந்தது. அதனை இங்கு மீண்டும் எழுதுதல் சிறப்பாகாது.

இளமையும் செல்வமும் யாக்கையும் (— கட்டும்) நிலையா தன. இம் மூன்றும் நிலையாதன ஆயினும், இவை இருக்கும் பொழுதே நிலைத்த திருவருளைப் பெறுதற்கு இவற்றைத் துணை யாகக் கொள்க. மன்னுவுலகத்து மன்னியது புரிதலும் மன்னுத இளமை, செல்வம், உடம்பு முதலியவற்றைக் கொண்டு மன்னிய திருவருளைப் பெறுதலும் மாந்தர்க்குச் சிறந்த கடன்மையாகும்.

இளமை நிலையாமைக்கு நீர்க்குமிழி யொப்பாக்குதல் இதிற் காணப்பட்டது. நாலடியாரில், 'படுமழைமொக்குளிற் பல்காலுந் தோன்றிக்கெடும் இது ஓர் யாக்கை' என்றுளது. இவ்வாசிரியர் அருளிய காசிக்கலம்பகத்தின் முதற் செய்யுளில், 'நீரெழுத் துக்கு ஒத்த உடல்' என்றும் ஈண்டு 'நீரில் எழுத்தாகும் யாக்கை' என்றும் உள்ளதை நோக்கின், யாக்கை நிலையாமைக்கு நீரி லெழுத்தையும் ஒப்பாக்குதல் பெறப்படும். நாலடியாரில் நீர்க் குமிழியை யாக்கை நிலையாமைக்கு ஒப்பாக்கியதறிக.

யாக்கை, தோன்றிய போதே கெடுதலுண்டு. யாக்கை தோன்றிப் பலயாண்டு இருக்குமாயின் இளமை தனக்குரிய காலம் இருக்கும். இளமை தோன்றிய போதே அழியாது. அதனால், தோன்றிய போதே அழியும் யாக்கைக்கு அவ்வாறுகும் நீரிலெழுத்தே ஒப்பாதல் பொருந்தும். தோன்றியிருந்து (சிறிது காலம் நின்று) அழியும் இளமைக்கு அவ்வாறு நின்று அழியும் மொக்குள் (நீர்க்குமிழி) ஒப்பாகும். ஆகவே ஆசிரியர் குமர குருபரமுநிவரர் அருளியதினும் நாலடியார் பாட்டில் உள்ளது சிறவாது. யாக்கையின் கேடு விரைந்து நிகழ்வது. நீரெழுத்தின் கேடும் மிகவிரைந்து நிகழ்வது. நீரெழுத்துக்கேட்டு விரைவை நோக்கின் நீர்க்குமிழிக் கேட்டு விரைவு காலத்தாற் குறை வுடையதன்று. ஆதலின் (யாக்கைக் கேட்டு விரைவைநோக் கின், யாக்கையின் இளமைக்கேட்டு விரைவு காலத்தாற் குறை வுடையதன்றுதலால்) இந்நூலில் உள்ளதே பொருந்திய ஒப் பாகும். ஒப்பும் உவமையும் வெவ்வேறேயாம். ஆயினும் பிற் காலப் பழக்கத்தில் இரண்டற்கும் வேறுபாடு கருதாது எழுதுவ தால் யாமும் இதில் இவ்வாறு எழுதினேம். இவற்றின் வேறு பாடு உணர்ந்தோர் குறைகூறுர் என்று நம்புகின்றேம். திரு வருட்பயனுரையில் ஒப்புமை என்றது ஒப்புவமை என்றுளது.

(1, 3, உரை) *திருநாவுக்கரசுநாயனூர் "ஒப்புடையன் அல்லன் ஓர் உருவன் அல்லன் ஓர் ஊரன் அல்லன் ஓர் உவமன் இல்லி" என்றருளியதாலும் ஒப்புமையும் உவமையும் வெவ்வேருதல் புலப்படும். நிரம்பவழகிய தேசிகன் 'உவமன்' என்றே யெழுதியது தம் * ஆசிரியர் மரபைக் குறித்தேயாம். பாவைபோல்வாளைப் பாவை என்றல் உவமை பற்றியது. அவ்வுவமை பாவைக்கும் அதுபோல் வாட்கும் உள்ள ஒப்புமை பற்றிது. இங்கு உவமை காட்டலாகும் பொருளே அன்றி நெஞ்சுகொளல் மட்டும் ஆகாது; வடிவுடையதாதலின். உருவுடையது உவமையாயின் காட்டலாகாது. நெஞ்சுமட்டும் கொள்ளலாகும். 'பால் போலும் இன்சொல்' என்றதில் உள்ளதைக் காட்டலாகுமோ? அதில் உள்ளது ஒப்பு. அஃது உவமையாகாது. வடிவுடையது கண்ணுக்குத் தெரியும். உருவுடையது கருத்துக்குத் தெரியும். தொல்காப்பியர் பொருளியலில்,

"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்ரு
கற்பும் ஏரும் எழிலும் என்ரு
சாயலும் நாணும் மடனும் என்ரு
நோயும் வேட்கையும் நுகர்வும் என்ருங்கு
ஆவயின் வருஉம் கிளவி யெல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப"

என்றதால் ஒப்பும் உருவும் பிறவும் காட்டலாகாப் பொருள் எனல் விளங்கும். உரு-உட்கு என்ருர் இளம்பூரணர். "எழுத்தென்றது யாதனையெனின், கட்புலனுகா வுருவுங் கட்புலனுகிய வடிவும் உடைத்தாக வேறு வேறு வகுத்துக் கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கு, இயைந்தும் நிற்கும் ஓசையையாம்" என்ற நச்சினர்க்கினியர், உரையையும் இங்குக் கொள்ளவேண்டும். 'உருவினும் இசையினும்' (எழுத்து. 40) என்றது காட்டலாகும் வடிவுக்கு நிறம் பற்றிய ஆகுபெயர்.

உவமை வினை, பயன், மெய், உரு என்னும் நால்வேறு திறத்தது. அத்திறத்துள் 'மெய்' யுவமம் ஒன்றே காட்டலாவது. ஏனைய மூன்றும் நெஞ்சு கொளலாவனவே. அந்நான்கினும் ஒப்புமை உண்டு. அவ்வொப்புமை காட்டலாகாதது.

'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' என்றதால், உவமையிலும் பொருளிலும் அவ்விரண்டற்கும் பொதுவாய ஒப்புமை இருத்தல் புலப்படும். உவமை பொருள் (உவமேயம்) ஆகாது. பொருள் உவமையாகாது. இரண்டனுள்ளும் ஒப்புமை யுண்டு.

மேற்குறித்த பொருளியனூற்பாவின் தொடக்கத்திலே 'ஒப்பும் உருவும்' பிறவும் 'காட்டலாகாப் பொருள' என்றவாறே, உவமவியலினும் (16)

"போல மறுப்ப ஒப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தஎன்று
ஒத்துவரு கிளவி உருவி னுவமம்"

என்றருளினர் ஆசிரியர் தொல்காப்பியர். உருவுவமைக்கே ஒப்புச் சொல் உரியது என்பதும் அது வழக்கிற் பிறழ்ந்தது என்றும் இதனாலறியலாம். 'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' என்றதால் அப்பிறழ்வு அவர்க்கும் முற்பட்டதென் பதும் அறிதற்பாலது. அவர், கூறுபாடு உணர்த்தும் உவம வியற்பால், வினை, பயன், மெய் என்னும் மூவகைக்கும் ஒப்பு என்னுஞ் சொல் இன்மையைக் காட்டினர். அந்நால் வகை யிலும் "உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்" என்று அச் சொல்லையே ஆண்டார். ஆளவே உருவினுவமத்துக்கே ஒப் புமை என்ற பொருள் குறித்த சொல் உரியதாதல் உறுதியாகா தொழிந்தது. இவ்வாறு துணிந்தது என்னையெனின், கூறுதும். ஆசிரியர் தொல்காப்பியர், சொல்லோத்துள் வேற்றுமையியலில் மூன்றனுக்குக் கூறியவற்றுள் 'அதனொடியைந்த ஒப்பலொப் புரை' என்றதற்கு எடுத்துக்காட்டாகச் சேனவரையர் 'பொன் னொடிரும்பு அனையர் நின்னொடுபிறரே' என்றார். 'ஒப்பல்லதனை ஒப்பாகக் கூறலின் ஒப்பு அல்(லாத) ஒப்புரையாயிற்று' என்று பெயர்க்காரணம் உரைத்தார்.

நச்சினார்க்கினியர் 'உவமையின்றி இதுவும் அதுவும் ஒக்கும் என அளவினாலும் நிறையினாலும் எண்ணினாலும் வருவன. இதனொடு ஒக்கும் இது; இக்கூற்றொடு ஒக்கும் இக்கூறு' என்று உரைத் தார். இவற்றால் ஒப்புமையும் உவமையும் வெவ்வேறு என்பது தெளி வாயிற்று. ஆகவே அத்துணிவு பிறந்தது. நச்சினார்க்கினியத்

திலே இங்கு 'ஒடு' 'ஓடு' என வருதற்கு வேறு இரண்டு எடுத்துக்காட்டுள்ளமையால் 'ஓடு' என்னும் உருபுடைய உதாரணங்களைக் காட்டியிருத்தல் முரணுறுகின்றது. அவர் அவ்வாறு காட்டியிருப்பின், 'இன்னும் அன்ன பிறவும் என்றதனுன் ஓடு ஆல் எனவரும் உருபுங் கொள்க என்று உரைத்து, மணிமேகலையினின்றும் சூளாமணியினின்றும் ஈருதாரணம் காட்டார். காட்டார்க்கு நாமுங்காட்டாம். நூற்பாவில் 'ஒடு' என்றிருக்க உதாரணத்தில் 'ஓடு' தலை எவ்வாறு கொள்ளல் தகும்? உலகிற் செய்யும் ஓடு அளவிற்குறுகியது. உதாரணத்தில் 'ஓடு' என்று நீண்டது ஏன்?

"என்னையும் பார்க்கச் சிறியோர், பிறப்பும் இறப்பும்இலா
உன்னையும் தெய்வம்என் றேதியநாவின் உலப்பவரைப்
பின்னையும் தெய்வங்கள் என்பார்; பழநிப் பிரான்குமரா
பொன்னையும் பொன்னென் றுரைப்பார் இரும்பையும் பொன்னென்பரே"

என்னும் பழநி யிரட்டைமணிமாலைப் பாடல், 1. 'செம்பொன்' 2. 'இரும்பொன்' 3. 'பைம்பொன்' 4. 'வெண்பொன்' என்னும் பெயர் வழக்கம் பற்றியெழுந்தது. 'பொன்னொடிரும் பனையர் நின்னொடு பிறரே' என்னும் ஒப்பலொப்புரை பற்றியும் இப்படிப் பாடலாயிற்று. அம்மாலை வெளியீடு புகழுடம்பெய்திய தமிழ்த் தெய்வத்தின் கருணைப் பிரசாதம். அதைப் புலவருட் சிற்சிலர் பெற்றுக் கற்று வந்திருக்கலாம். 'வாகீச கலாநிதி' மறைத் திரு. கி. வா. ஜகநாதையர் M. A., அவர்கள் 'கலைமகள்' வெளியீடாகத் தமிழகத்திற்கு வழங்கினர்கள். களக்காடு சத்தியவாகீசர் இரட்டைமணிமாலையும் இதையொத்ததொரு சிறந்த பெரும்பொருட் சிறுபனுவல். இவ்விரண்டனையும் பலமுறை வெளிட்டுதவுதல் தமிழ்ச் செல்வர்க்குக் கடனுகும். தமிழ்த் தாய்க்கு ஒப்புயர்வில்லாத் தொண்டு செய்த ஐயரவர்கள் பதிப்புக்களை எதிர்காலத்திற் கிடைக்காதபடி செய்வது தமிழ்க் கொலையாகும். புத்துரைகள் மட்டும் போதுமா? பழையவுரைகளை அவற்றின் உண்மையுருவத்தில் உணரும் நலங்கள் புத்துரையால் எள்ளளவும் பெறல் இயலாது. தமிழ்ச் சான்றோர்கள் இத்திறத்தில் உயர்ந்தேறுவார்களாக உள்ளத்தால். அவர்கள் பேரனுர் இனி அச்சிடுவதில்லை என்னும் உறுதி கொள்ளத் தமிழர் இடங் கொடுத்தல் தமிழன்னைக்குத் துரோகமாக முடியும்.

நிலையாமை குறித்து எல்லா மொழியிலும் பழங்காலத்திலும் பலபலவாறு அறிவுறுத்தினர். நிலையாமை குறித்த உண்மை எந்நிலத்தார்க்கும் மேலுலகத்தார்க்கும் பொது. உயிர்கள் அதை மறந்தால்தான் ஓரளவு இன்பம் அடையலாம். உடல் நிலையாது உயிர்நில்லாது உடைமை நில்லாது என்று எஞ்ஞான்றும் எண்ணிக் கவன்றால் உலகிற் கவலை ஒன்றே யன்றி வேறு யாது இருக்கும்; கடவுள் மறப்பை வைத்திருப்பதால்தான் வாழ்வு இன்பமாகத் தோன்றுகிறது. அறிவான் மிக்க பெரியோர்கள் இவ்வின்பத்தைச் சிறிதும் வேண்டாதார்கள். ஆதலின், நிலையாமை குறித்து அவர்கள் கூறுவதில், ஒரு தனியாற்றல் அக் கூற்றுக்குண்டாகின்றது. அவரினும் அருளான் மிக்க ஞானிகள் திருவாக்கு முடிவிலாத ஆற்றலையுடையது. அவருள் ஒருவர் நம் குமரகுருபர முனிவரர். அவர் திருவாக்கில் வந்த இச்செய்யுள் நமக்கு அறிவுறுத்துவது யாது? நடராசப்பிரானது பொன்மன்று கண்டு வழிபடாதமாக்கள் தம் இளமையையும் செல்வத்தையும் யாக்கையையும் நிலையுதல் உடையனவாக மயக்க வுணர்வால் மதித்து அரிய தம் மனித்தப்பிறவியை அநித்தப்பொருளவாவால் வீணுக்கியழிகின்றுர்களே என்று பரிவது சாண்ருண்மைக் குரியதன்றே? திருக்குறளில் 'நிலையாமை' என்னும் அதிகாரத்திற் கூறிய எல்லா வற்றையும் அடிக்கடி நினைவிற்கொண்டுவரல் இனிது.

புல்லறிவாளர் இழிபையும் அவர்பற்றுச் செய்யும் செல்வ நிலையாமையையும் யாக்கை நிலையாமையையும் முறையே ஒன்று இரண்டு ஏழு பாக்களால் உணர்த்தினுர். அவற்றைப் பரிமேலழகருரையொடு கற்றுய்வது உணர்வு பெற்றுய்ய வேண்டுவார்க்குரிய கடனுகும்.

பொருநராற்றுப் படையிலும் பெரும்பாணாற்றுப் படையிலும் 'நில்லாவுலகத்து நிலைமை தூக்கி' (176+466) என்னுந் தொடர்க்கு நச்சினுர்க்கினியர் "செல்வமும் யாக்கையும் முதலியன நிலைநில்லாத உலகத்துப் புகழைச் சீர்தூக்கிப் பார்த்து" என்றும் "யாக்கையும் செல்வமும் முதலிய நிலையில்லாத உலகத்திடத்து நிலைபேறுடைய புகழை நாம் பெறுதல் நன்றென்று ஆராய்ந்து" என்றும் உரைத்தார். அவற்ருல் நிலை

யுடையது புகழ் என்றும் அதைப்பெறுதலே நன்று என்றும் யாக்கையும் செல்வமும் நிலையாதன வாதலின் அவற்றை நிலைப் பனவாக மயங்கிக் கொண்டு, அவையுள்ள போதே புகழைத் தேடிக்கொள்ளாமை பிறவிப்பயன் பெறுமை என்றும் இளமை முதலியவற்றை 'முதலிய' என்ற ஆதிசப்தத்தாற் கொள்ளவைத் தார் என்றும் விளங்குதல் கூடும்.

சிலப்பதிகாரத்தில் இம்மூன்றனையும் தக்க ஆதாரங்காட்டி விளக்கினார் இளங்கோவடிகள். மணிமேகலையில் "இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா"என்று இளமை முதலிய மூன்றன் நிலையாமையை மட்டும் அதன் ஆசிரியர் கூறினார். இளங்கோவடிகள் வஞ்சிக் காண்டத் தில் அமைத்த ஏழுகாதையுள் இருபந்தைந்தாவது முதலாக ஐந்தும் தொல்காப்பியப்புறத்திணையுள் (5) உணர்த்தும்

காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல்

என்பவற்றின் இலக்கியமாக அமைந்துள்ளன. இதில் 'பெரும் படை' என்றதும் ஆராய்ச்சிக்குரியது. அதைப் பின்னர் எழுது வோம்.

இங்கு ஒன்று யாவரும் அறிதற்குரியதுண்டு. இது துண்டு என்று கொண்டு தள்ளற்பாலதன்று. எத்துணைச் சிறுமையினும் பண்டைச் சான்றோரது நுட்பவுணர்வு புலப்படுதல் மிக்க பெருமையுடையதாகும். காட்சி, கல்கோள், நீர்ப்படை, நடுதல், வாழ்த்தல் எனத் தொழிற் பெயராற் கூறிய வாற்றையுணர்தல் வேண்டும். அவ்வாறே இளங்கோவடிகளும் கொண்டு பாடி யருளினார். அருளியும் கல்கோள் என்றது கால்கோள் என்றும் நடுதல் என்றது நடுகல் என்றும் உருப்பெற்றமை வருத்தங் கொடுப்பதே. 'கல்கோள்' என்றது தொல்காப்பியம். அதைக் கால்கோள் என்றால், கல்லைக் கொள்கை என்னும் பொருள் தருமோ? நூற்பாவைக் 'கால்கோள்' எனப் பிழைத்துக் கொண்டமையால், சிலப்பதிகாரத்திலும் 'கால்கோட்காதை' எனப் பிழைத்துக் கொள்ளுந் துணிவுண்டாயிற்றே? இளங்கோ வடிகள் 'கற்கால் கொண்டனன் காவலன்' என்றாரேயன்றிக் கால்

கொண்டனன் என்று மட்டும் குறித்தாரல்லர். 'பத்தினிக்கல்' கோள் என்னுங் கருத்தும், 'கற்கால்கோள்' என்னும் கருத்தும் அவர் வாக்கால் விளங்குதல் காண்க. 'பொற்கோட்டிமயத்துப் பொருவறு பத்தினிக்கல்' என்றதையும் உற்றுணர்தல் வேண்டும். காண்டல் (காட்சி) கல்கொளல் (கல்கோள்) நீரிற்கல்லைப்படுத்தல் (நீர்ப் படை) (அக்கல்லை) நடுதல், வாழ்த்தல் என்னும் ஐந்தும் தொழிற் பெயராற் கூறிய தொல்காப்பியர் கருத்துணர்ந்து இளங்கோவடிகள் அவ்வாறே அவ்வைந்தனையும் அமைத்திருத் தலால் அவற்றுள் ஒன்றனைக் கால்கோள் எனப் பொதுப்பெயராயும் மற்றொன்றனை 'நடுகல்' என வினைத்தொகையாயும் பிழைபடக் கொண்டமை எவ்வாறு பொருந்தும். நடுதல் பிரதிட்டை என்பது. 'கடவுள் மங்கலம்' என்னும் வழக்கமும், கடவுள் மங்கலம் செய்க என ஏவியதும், ஏவியவாறு இயற்றலும் 'நடுதல்' என்றதற்கே பொருத்தமாமாறு காண்க. 'நடுகல்' என்னும் வினைத்தொகைப் பெயர்க்குப் பொருத்தமோ?

அந் நடுதற்காதையுள் (125–168 அடிகள்) யாக்கை நில் லாமையும், செல்வம் நில்லாமையும், இளமை நில்லாமையும் (யாக்கை வேறுபடலும்) விளங்கக் காட்டப்பட்டன. அப்பகுதி யைப் பலமுறை படித்தல் சால நன்றாகும்.

"புல்நுனிப் பனிவெங்கதிர் கண்டாற் போலும் வாழ்க்கை" என்றும், "ஓடுபுனற் கரையாம் இளமை உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி, வாடியிருந்து வருந்தல் செய்யாது அடியேன் உய்யப்போவதோர் சூழல் சொல்லே" என்றும் நாவலர் கோன் நம்பியா ரூரனும்

"கொப்புளே போலத் தோன்றி அதனுளே மறையக் கண் டும் இக் களேபரத்தை ஓம்ப என் செய்வான் தோன்றினேனே" என்று பாவலர்க்கரசரும் அருளியவற்றையும் ஈண்டுக் கருதுக. நிலையாதவற்றை நீத்து நிலைத்த திருவருளையே தேடிக்கொள்க. இதுவே உயிர்க்குறுதி. "நில்லாதவற்றை நிலையின என்றுண ரும் புல்லறிவாண்மைகடை" இது வீட்டு நோக்கமுடையார்க் கெல்லாம் பொது. 'பவனமாய்' என்று திருஞான சம்பந்தர் அருளிய திருப்பதிகத்தைச் சைவ நெஞ்சம் மறத்தல் கூடுமோ?

(தொடரும்)

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member. Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17. இதழ் 1-ன் தொடர்ச்சி

The Descent of Grace Snaps the Cycle of Births
சத்திநிபாதம் பிறவித்தளையை வேரறுக்கின்றது

101. கன்னித்துறை படிந்தாடிய ஆடவர்
கன்னித்துறை படிந்து ஆடும் கருத்திலர்;
கன்னித்துறை படிந்து ஆடும் கருத்துண்டேல்,
பின்னைப்பிறவி பிறிதில்லைதானே.

They that hath sported in the waters of Virgin Grace,
No more shall wallow in the filthy waters of virgin's lust:
If thou but seek to sport in the Holy Virgin's waters of [Grace,
No more births shalt thou in future take.

அருளாம் சத்திப்பெண்ணின் பேரின்ப வெள்ளத்திலே திளைத்தோர், கன்னிப்பெண்களின் சிற்றின்பக் குட்டையிலே தோய்வுறுர், சத்தியின் அருளைப்பெறும் நாட்டம் கொண்டவருக்கு பிறவித்தளை அறுபடும்.

The Lord is the Soul's Redeemer
இறைவன் ஆன்மாவை உய்விக்கவல்லவன்

102. செய்யன், கரியன், வெளியன், நற்பச்சையன்
எய்த உணர்ந்தவர் எய்வர் இறைவனை
மை வென்றகன்ற பகடுரி போர்த்தவெம்
கையன் இவனென்று காதல் செய்வீரே.

He is the Red One (Destroyer)
The Dark One (Preserver)
The white One (Creator)
The Green One (Redeemer)
–They who know Him thus, free of doubt
Of a certain shall seek Him
Remember thou this;
His are the sinewy arms
That skinned the dark massive elephant
And donned it for a vesture;
Do thou, therefore, seek Him and adore Him.

இறைவன் செந்நிற உருத்திரனுகவும், கருநிறத்திருமாலாகவும், வெண்ணிறப்பிரமனுகவும், பச்சைநிறத்து அருட்சத்தியாகவுமிருக்கின்ருன். இதனை முடிவாக உணர்ந்தவர்கள் அவனையே நாடுவார்கள்; கருமை கொண்ட உருவத்திற் பெரிய யானையினை உரித்து, அதன் தோலைப் போர்த்திய வலிமை மிகுந்த கைகளையுடையவன் அவன் என்று அறிந்து, அத்தகையப் பெரியோனை அன்பொடும் போற்றுதல் செய்வீர்களாக.

குறிப்பு:

வரி: 3. *கரிய யானை ஆணவத்தையும், அதன் தோல் கன்ம வினையையும் சுட்டி நின்றன.*

Tha Lord and Sakti are one and the Same

இறைவனும் சத்தியும் ஒன்றே

103. எய்திய காலங்கள் எத்தனை யாயினும்
தையலும் தானும் தனிநாயகம் என்பர்;
வைகலும் தன்னை வணங்கும் அவர்கட்குக்
கையிற் கருமம் செய்காட்டது வாமே.

Infinite the passage of Time's Eternity
Yet they Say, He and His Consort are one:
For them that adoreth Him daily in devotion;
He is verily the unfailing proof of labour readily rewarded.

எத்தனை ஊழிகாலங்கள் செல்லினும், இறைவனும் சக்தியும் ஒன்றென்பர். நாளும் அவனை வணங்குவோர்க்கு செய்த வேலைக்குக் கூலி கையில் விளங்குவதுபோல் பயனருளுகின்ருன்.

The Vision of the Twain in union

இறைவனும் சத்தியும் ஒருங்கே அருளல்

104. கண்டு கண்டோம் இரண்டும் தொடர்ந்தாங்கொளி
பண்டு பண்டேயும் பரமன் பரஞ்சுடர்
வண்டு கொண்டாடு மலர் வார் சடை அண்ணல்
நின்று கண்டார்க்கு இருள் நீக்கி நின்றனே.

Given unto me was to vision the Light
That shone from the Twain in unison;
It was verily the Light Divine of the Ancient One,
In whose matted locks bedecked with flowers,
The bees dance drunk with nectar;
They that waited in patience and prayer
They indeed saw Him,-their darkness dispelled.

சக்தி சிவனாகிய இருவருமிணைந்த ஒளியைக் கண்டு கொண்டேன்; அதுவே, அநாதியாம் பரம்பொருளின் பேரொளியாகும். ஒருமையொடு இறைஞ்சி நின்று காண்பார்க்கு, வண்டாடும் மலர்ச்சடைப் பெம்மானும் இறைவன் மல இருளைப் போக்கி நிற்கின்றான்.

(தொடரும்)

சப்த விடங்க ஸ்தலங்கள்

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில் — பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

1. திருவாரூர்–வீதிவிடங்கர்–அசபா நடனம்.
2. திருநள்ளாறு–நகரவிடங்கர்–உன்மத்த நடனம்.
3. திருநாகைக் காரோணம்–சுந்தரவிடங்கர்–பாராவாரதரங்க நடனம்.
4. திருக்காறாயில்–ஆதிவிடங்கர்-குக்குட நடனம்.
5. திருக்கோளிலி–அவனிவிடங்கர்–பிருங்க நடனம்.
6. திருவாய்மூர்–நீலவிடங்கர்–கமல நடனம்.
7. திருமறைக்காடு–புவனிவிடங்கர்–ஹம்ஸபாதநடனம்.

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்

உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 17. இதழ் 1-ன் தொடர்ச்சி)

சப்பாணிப் பருவம்

முடங்குந் திரைப்பரவை வயிறுளைந் தீன்றநறு
முளரிப் பிராட்டிவைத்து
முத்தாடு பச்சைப் பசுங்கிள்ளை யெனமழலை
முதிருமென் குதலைகற்பத்
தொடங்குங் குறப்பாவை கற்றைக் குழற்ககிற்
றூமமொடு தாமமிட்டுச்
சுடிகைநுதல் வெயர்வுந் துடைத்தொழுகு கத்தூரி
தூரியங் கொண்டு தீட்டிக்
குடங்கைக் கடங்கா நெடுங்கட் கடைக்கழகு
கூரவஞ் சனமெழுதிமென்
கொங்கைத் தடத்துப் பசுங்களப மப்பியவள்
குற்றேவல் முற்றுமாற்றித்
தடக்குங் குமப்புயம் கொட்டிநட மிட்டவன்
சப்பாணி கொட்டியருளே
தையலு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. 32

மடங்கி எழுகின்ற அலைகளை உடைய கடல், வயிறு வருந்திப் பெற்ற, நல்ல செங்கமல நாயகியாகிய திருமகள், அன்பு வைத்து முத்தமிட்டுப் பாராட்டிய, பச்சைக் கிளியை ஒத்த மழலை முதிர்ந்த மெல்லிய குதலை மொழிகளைக் கற்கத் தொடங்கும் குறமகளாகிய, வள்ளியம்மையினது தொகுதியாகிய கூந்த

லுக்கு, அகிற்புகையோடு பூந்தாரைச் சூட்டி, சுட்டி யணிந்த நெற்றியின் வெயர்வையையும் துடைத்து, ஒழுகுகின்ற கத்தூரியை எழுதுகோல் கொண்டு எழுதி, உள்ளங்கைக்கு அடங்காத நீண்ட விழிக்கடைகளுக்கு அழகு பொருந்த மை தீட்டி, மெல்லிய கொங்கைகளின் மேல் பசிய களபத்தைப் பூசி, அவ ளிட்ட குற்றேவல் முழுவதையும் செய்து, பெரிய குங்குமம் அணிந்த தோள் கொட்டி நடமிட்டவனே! சப்பாணி கொட்டி யருளுவாயாக. தையல் நாயகி மருவுகின்ற தெய்வநாயகனது மைந்தனே! சப்பாணி கொட்டியருளுவாயாக.

மழைக்கொந் தளக்கலப மயிலிளஞ் சாயனெடு
மதரரிக் கெண்டையுண்கண்
மான்கன்றை யமருலகு வாழப் பிறந்திடு
மடப்பிடியை வானவில்லைக்
குழைக்குந் தடக்கைத் திருத்தாதை நீரொடு
கொடுப்பக் குடங்கையேற்றுக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்பவக்
கொம்புமின் கொடியிஞெல்கி
இழைக்கும் பசும்பொற் றசும்பென வசும்புபொன்
னிளமுலை முகங்கோட்டிநின்
றெய்யாமை நோக்கும் படைக்கட் கடைக்கணேக்
கின்னமுத முற்றவின்பம்
தழைக்கும் பெருங்காதல் வெள்ளம் திளைத்தவன்
சப்பாணி கொட்டியருளே
தையனா யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. 33

மேகம் போன்ற கூந்தலையும், தோகையையுடைய மயிலினது இளமையான சாயலையும், நீண்ட மதர்த்த செவ்வரி படர்ந்த கெண்டைமீன் போன்ற மை தீட்டப்பெற்ற கண்களையும் உடைய மான் கன்று போன்ற வானவர் உலகம் வாழப் பிறந்த இளம் பிடியாகிய தெய்வயானையை, வானவில்லைவளைக்கின்ற பெரிய கைகளையுடைய தந்தையாகிய இந்திரன் தாரை வார்த்துக் கொடுக்க, உள்ளங்கையிலே ஏற்றுச் செழுமையான பூமணம் வீசுகின்ற மணப்பந்தரிலே நிற்க, அந்தப் பூங்கொடி

போன்ற தெய்வயானை மின்னற் கொடிபோல் அசைந்து, பசும் பொன்னுல் செய்யப்பெற்ற குடம்போல விளங்குகின்ற அழகிய இளங்கொங்கைகளையுடைய அவள், நாணத்தால் முகம் சாய்த்து நின்று பிறர் அறியாவண்ணம் நோக்குகின்ற படைக்கலத்தை ஒத்த கடைக்கண் நோக்கமானது இனிய அமுதத்தை ஊற்ற, அதனுல் இன்பந் தழைக்கின்ற பெருங்காதல் வெள்ளத்தில் திளைத்தவனே! சப்பாணி கொட்டியருளுவாயாக. தையல்நாயகி மருவுகின்ற தெய்வ நாயகனது மைந்தனே! சப்பாணி கொட்டி யருளுவாயாக.

உண்ணிலா வுவகைத் தடங்கடல் படிந்திட்ட
உம்பரும் செங்களம்பட்
டொண்பருதி யுடல்கிழித் தோடுங் கடற்றுனை
ஒளிறுவா ளவுணர்குழுவும்
தெண்ணிலா மதிநுதற் றெய்வப் பிணுக்கள்வாய்த்
தேனமுது மமுதவாரித்
தெள்ளமுது முடனிருந் துண்ணப் பணித்திட்ட
செங்கைவேல் பைம்புனத்துப்
பண்ணுலா மழலைப் பசுங்கிளவி யெயினர்பொற்
பாவைவிழி வேலொடொப்புப்
பார்க்குந் தொறுந்தலை கவிழ்த்துநின் றவடிருப்
பவளத்து முத்தரும்பும்
தண்ணிலா வுக்கொண் சகோரமென நின்றவன்
சப்பாணி கொட்டியருளே
தையனு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. 84

உள்ளே நிறைந்த உவகைப் பெருங்கடலில், தம் பகைவர் களாகிய அசுரர்கள் அழிவது கண்டு படிந்து மகிழ்ந்த தேவர் களும், செங்களத்திலே இறந்து ஒள்ளிய கதிரவனது உடலைக் கிழித்துக் கொண்டு வீரசுவர்க்கத்திற்குச் செல்லுகின்ற கடல் போன்ற பெரிய வலிமையை உடைய அசுரர்களின் சேனைக் கூட்டமும், தெள்ளிய நிலவை வீசுகின்ற பிறைத் திங்களை யொத்த நெற்றியையுடைய தெய்வப் பெண்களது வாய்ச்சொல் லாகிய தேனமுதையும், பாற்கடலில் உண்டாகிய தெள்ளிய

அமுதையும் உடனிருந்து உண்ணும்படி கட்டளை தந்த சிவந்த திருக்கரங்களிலேயுள்ள வேலை, பசிய தினைப்புனத்தில் இசை பொருந்திய பசிய மழலைச் சொல் பேசுகின்ற வேடர்களின் பொற்பாவையாகிய வள்ளிநாயகியின் விழிவேலுடன் ஒப்புப் பார்க்குந் தோறும், தலையைக் கவிழ்த்து நின்று அவளது அழகிய வாயாகிய பவளத்திலுள்ள பற்களாகிய முத்துக்கள் வீசுகின்ற தண்ணிய நிலவொளியைப் பருகுவதற்கு ஒள்ளிய சகோரப்புள்ளைப் போல நின்றவனே! சப்பாணி கொட்டியருளுவாயாக.

(தொடரும்)

ஞானக் குழந்தை

இராகம் : இந்தோளம் தாளம் : ஆதி

எடுப்பு

ஞானக் குழந்தை என்று சொன்னார் — அதை
ஞாலத்தில் நான்கண்டு கொண்டேன் (ஞான)

தொடுப்பு

வான விளிம்பினில் வேலேந்தி மயில்
வாகனனாய் வந்த பேரெழில் செல்வத்தை (ஞான)

முடிப்பு

ஆறுபடை வீட்டில் அமர்ந்த திருவடிவை
அன்பர்கள் ஏத்திடும் வள்ளி மணாளனை
கூறுபட அவுணரை வதைத்தநல் வீரனை
கோலத்தமிழ் முருக வேந்தனை கந்தனை (ஞான)

ப. இராஜேஸ்வரன்.

அப்பருக்கு அப்பர் அளித்த கயிலைக் காட்சி

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
திருவையாறு.

[மலர் 17. இதழ் 1-ன் தொடர்ச்சி]

ஐயர் திருவாக்கு "திருநாவுக்கரசரே எழுந்திரும்" என்றலும் தேய்ந்துபோன அவயவங்கள் எப்படி வளர்ந்தன. அப்பர் உடல் பழைய உடலாக இருக்கின்றதே! அண்டங்கள் அணுக்களாகவும் அணுக்கள் அண்டங்களாகவும் செய்ய வல்ல அவன் அருளை யார் அறிவார்? எழுந்த திருநாவுக்கரசர்

அண்ண லேஎனை ஆண்டுகொண்
டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி
வேதநா யகனே
கண்ணி னல்திருக் கயிலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்
புரிஎனப் பணிந்தார்.

பெருங்கருணைத் திருவுருவப் பெருமான் அப்பரை நோக்கி உமக்குத் திருக்கயிலைக் கோலக் காட்சி வேண்டும் அக்காட்சியை எவ்விடத்தில் காட்டினும் அமையும். 'இதோ இக்குளத்தில் முழுகும். மூழ்கினால் திருவையாற்றுக் குளத்தில் எழுந்திருப்பீர். எழுந்த அளவையில் அங்கு உமக்குத் திருக்கயிலைக் காட்சியை அளிப்போம்' என அருளினர்.

இதைப்பற்றி ஓர் பேரறிஞர் கூறுவது: சேரமான் பெருமாள் நாயனுர்க்கும், காரைக்கால் அம்மையார்க்கும் கொடுத்த திருக்கயிலைக் காட்சி அப்பருக்கு அளிக்கலாகாதா? அப்பர் தகுதியற்றவரா? இல்லை நம்மைத் தேடிவந்து, நாம் இருக்கும் இடம் அடைந்து வர, அப்பருக்குக் காட்சி கொடுப்பது நம்

பெருமைக்குத் தகாது. அவர் நம்மைத் தேடுவதற்குப் பதிலாக நாம் அவரைத் தேடிச் சென்று அவர் இருக்கும் இடத்திலேயே காட்சி கொடுத்தால்தான் நமக்குப் பெருமை என்று சிவபெருமான் திருவையாற்றில் காட்சி கொடுத்தனர். இதற்குச் சான்றாக நமது அப்பர் பெருமான்,

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்

எனத் திருவண்ணாமலைத் திருக்குறுந்தொகைப் பதிகத்திலும்,

"நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே"

என நமச்சிவாயப் பதிகத்திலும் திருவாய் மலர்ந்தருளியமை காண்க.

உடனே அப்பமூர்த்திகள் திருஐந்தெழுத்தை ஓதி அக் குளத்தில் முழுகி திருவையாற்றிலிருக்கின்ற ஒரு வாவியின் மேலே தோன்றிக் கரையேறினார். 'யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது' என்னும் அப்பர் பெருமான் திருவாக்கும், 'குளிச்சி எழுந்த நாயனார்' என்று திருப்புகலூர்க் கல்வெட்டில் குறிப்பிடப்படுவதும் இந்நிகழ்ச்சிக்குச் சான்றுகளாகும்.

திருக்கயிலைக் கோலக் காட்சியைக் கண்டு திளைத்தது.

வழியிலே அத்திருவையாற்றுத் தலத்திலுள்ள இயங்கியற் பொருள் அனைத்தும், ஏனைய நிலையியற்பொருள் அனைத்தும் தங்கள் தங்கள் துணையொடும் பொலிதலைக் கண்டு, அவைகளைச் சத்தியும் சிவமுமாகப் பார்த்து வணங்கிக் கொண்டு ஐயாறப்பர் திருக்கோயிலுக்கு வர, அத்திருக் கோயிலே கயிலைமால் வரையாகக் காட்சியளிக்கிறது. இச்செய்தி,

'மன்னு மாதவர் தம்பிரான் கோயில்முன் வந்தார்'

(374. செய்யுள்)

காணும் அப்பெருங் கோயிலுங் கயிலைமால்
வரையாய்ப்
பேணு மாலயன் இந்திரன் முதற்பெருந்
தேவர்

பூணும் அன்பொடு போற்றிசைத் தெழுமொலி
பொங்கத்
தாணு மாமறை யாவையுந் தனித்தனி
முழங்க. (செய்யுள் 375.)

என்னும் திருநாவுக்கரசு நாயனார் புராணச் செய்யுட்களால் அறியக்கிடக்கின்றது.

பூத வேதாளப் பெருங்கணநாதர் சூழ்கின்றனர். இந்திரன் முதலிய தேவர்கள் வாழ்த்திப் புடை சூழ்கின்றனர். பதினெண் கணத்தவரும் பாடி ஆடுகின்றனர். அரம்பையர் நடனம் ஒரு பால். கங்கை முதலாகிய நவதீர்த்தங்களும் போற்றி வந்து புடைசூழ்கின்றன. இதன் இடையில் பெருமான் காட்சியளிக்கின்றார். ஒரு வெள்ளி மலை. அதன் மேல் ஒரு பவளமலை. அருகே ஒரு மரகதக் கொடி தோன்றுவதுபோல் அம்மையாரொடும் காணப்படுகின்றது ஐயர் திருக்கோலம். அதனை,

வெள்ளி வெற்பின்மேல் மரகதக்
கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்
பெனஇடப் பாகம்
கொள்ளு மாமலை யாளுடன்
கூட வீற்றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர்
வாக்கின்மன் னவனார்.

என்கிறது சேக்கிழார் திருவாக்கு.

கண்ட ஆனந்தக் கடலினைக்
கண்களால் முகந்து
கொண்டு கைகுவித் தெதிர்விழுந்
தெழுந்துமெய் குலைய
அண்டர் முன்புநின் றுடினார்
பாடினார் அழுதார்
தொண்ட னார்க்கங்கு நிகழ்ந்தன
யார்சொல வல்லார்.

சிவானந்தப் பெருங்கடலில் திளைத்த நமது அப்பர் பெருமான் தமக்கு இறைவன் அருளிய காட்சியைப் பாராட்டி, 'மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்' என்னும் பதிகம் பாடினூர். அதன்பின் திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருவிருத்தங்கள் பாடித் தங்கியிருந்தனர்.

இங்ஙனம் சத்தியும் சிவமுமாய் எழுந்தருளியிருக்கும் திருக்கோலமே திருக்கயிலைக் காட்சியாகும்.

இந்த ஐதீகத்தை விளக்கும் திருக்கோயில் ஐயாறப்பர் திருக்கோயிலின் பெரியபுறத் திருச்சுற்றுலையின் (பெரிய பிரா காரம்) தென்பால் இருக்கின்றது. இதற்குத் தென்கயிலைத் திருக்கோயில் என்று பெயர். இக் கோயில் நம் சோழ மண்ட லத்தை கி. பி. 1012 முதல் கி. பி. 1044 வரை ஈடும் எடுப்பு மின்றி ஆண்ட முதலாம் இராசேந்திர சோழ தேவரின் தேவி யாராகிய பஞ்சவன்மாதேவியாரால் அம்மன்னனது முப்பத் தொன்றுவது இராச்சிய ஆண்டில் அதாவது (1012+31) = கி. பி. 1043-இல் கருங்கல்லால் கட்டப்பட்டது. எனவே இக் கோயில் கட்டப்பட்டு இற்றைக்கு 922 ஆண்டுகள் ஆகின்றன. இச்செய்தி "திருமன்னி வளர இருநிலமடந்தையும்' எனத் தொடங்கும் மெய்க் கீர்த்தியையுடைய கல்வெட்டில், மாப் பெருந்தண்டாற் கொண்ட கோப்பரகேஸரிபன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவற்கு யாண்டு முப்பத்தொன்றுவது வடகரை ராஜேந்திரசிங்க வளநாட்டு பொய்கை நாட்டு திரு வையாற்று, நம்பிராட்டியார் பஞ்சவன்மாதேவியார் எடுப்பிச் சருளுகின்ற கற்றளி தென் கயிலாயமுடையார் கோயில்"

என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியக்கிடக்கின்றது. இக்கோயில் திருச்சுற்று மாளிகையும் இவ்வம்மையாலேயே கட்டப்பட்டது. இதற்கு, "பஞ்சவன்மாதேவி வினைமாராயனும், வணக்கக்குடி மாதேவனும், சாலை ராஜேந்திர சோழதேவற் கணக்கு திருவரங்கனும் தென்கயிலாயமுடையார் கோயிலிற் திருச்சுற்று மாளிகையிருந்து" என்னும் மேற்குறித்த கல் வெட்டுப் பகுதியே சான்று.

இவ்வம்மையார் இக்கோயிலைக் கட்டியதோடு தென்கயிலாயமுடையார்க்கும், உமபரமேஸ்வரியார்க்கும், துர்க்கையார்க்கும் சாத்தியருள விலையுயர்ந்த அணிகலன்களைத் திருவையாறுடையார் கல்லால் நிறை எடுத்துக் கொடுத்துள்ளனர். இறைவர் இக்கோயிலில் சத்தியும் சிவமுமாய் எழுந்தருளியிருக்கும் கோலத்தைக் காணலாம். அப்பர் பெருமானின் பிரதிமம் இத் திருக்கோலத்தைக் கண்டு களிக்கும் முறையில் மகாமண்டபத்தில் எழுந்தருளிவிக்கப் பட்டுள்ளது. இம்மகாமண்டபத்தின் மேல் தளத்தின் அடிப்பாகத்தில் திருத்தில்லையிலிருந்து கைலை சென்று அங்கு ஒரு திருக்குளத்தில் மூழ்கி ஐயாற்றில் எழுந்து காட்சியைக் கண்டுகளிக்கும் வரையில் ஓவியங்கள் தீட்டப் பட்டுள்ளன. இக்கோயில் கல்வெட்டிலோ, ஐயாறப்பர் கோயில் கல்வெட்டிலோ, அப்பர் பெருமானைப் பற்றிய செய்தி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

இந்தக் கயிலைக் காட்சிவிழா ஆண்டுதோறும் ஆடி அமாவாசையில் திருவையாற்றில் சிறக்க நடந்து வருகின்றது.

கயிலை மலையானே போற்றி போற்றி.

திருநாவுக்கரசர் அற்புதங்கள்

தலைகொள் நஞ்சமு தாக விளையுமே
தழல்கொள் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் ஆனை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிட்ம் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவுதானும் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லு மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

திருவானைக்காக் கல்வெட்டுக்களும் திருநாவுக்கரசர் தேவாரமும்

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M. A., B. O. L.,
திருப்பனந்தாள்.

தலக்குறிப்பு

வித்தகப்பாடல் முத்திறத்து அடியார்கள் ஆகிய சம்பந்தர் அப்பர் சுந்தரர் ஆகிய மூவர் பாடியருளிய திருமெய்ஞ்ஞானத் திருநெறிய தமிழ் பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள், திருவானைக்கா ஒன்றாகும். யானை பூசித்துப் பேறுபெற்றமையால் திருவானைக்கா எனவும், வெண்ணாவல் - ஜம்புதல விருக்ஷமாகையால் ஜம்புகேசுவரம் எனவும் இத்தலம் பெயர்பெறும். இத்தலம் பஞ்சபூதத்தலங்களுள் அப்புத்தலம். ஆகவே இறைவன் நீர்த்திரள்நாதர் எனப்பெறுவர். உமாதேவியார் இங்குத் தவஞ் செய்து ஞானோபதேசம் பெற்றமையின் இத்தலம் ஞானஸ்தலம் எனவும் பெயர்பெறும்.

கல்வெட்டுக்கள்

திருவானைக்கா ஜம்புகேசுவர சுவாமி கோயிலில் 154 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை வெவ்வேறு ஆண்டுகளில் படியெடுக்கப் பெற்றன. அவற்றுள் 1891-ஆம் ஆண்டில், 18 - 32 எண்ணுகப் படியெடுக்கப் பெற்றவை, தென்னிந்திய சாஸனங்கள் - தொகுதி IV-ல் 419 முதல் 433-ம் எண்ணுக வெளியிடப்பெற்றுள்ளன. அக்கல்லெழுத்துக்களுள் சிலபெயர்கள் திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பகுதிகளை நினைப்பிப்பனவாக இருக்கின்றன. அவற்றைப்பற்றி எழுதுவதே இத்தொகுப்புரையின் நோக்கமாம்.

தேனுருங்கொன்றையன்

மூன்றும் இராசராச சோழனுடைய பதினுருவதின் எதிராமாண்டுக் கல்வெட்டு ஒன்று அக்கோயிலில் உள்ளது (23 of

1891; 424 of vol IV). அதிற்கண்ட காலக் குறிப்பை ஆய்ந்து அக்கல்வெட்டு 25—9—1232-ல் எழுதப்பெற்றது என்று கீல் ஹார்ன் என்பார் கூறுவர் (K. A. N. COLAS – Part II Page 742; Footnote No. 16). இக்கல்வெட்டில் கையெழுத்திட்டவர் களுள் ஒருவர் தேநாருங்கொன்றையன் என்ற பெயருடையவராவர். இப்பெயர் திருநாவுக்கரசர் திருவானைக்காவில் அருளிய திருத் தாண்டகத்தில் காணப்படுகிறது :—

ஊனாகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்றாய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்
தேனாருங் கொன்றையனே நின்றி யூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனாயுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டம் கொண்டடியேன் என்செய் கேனே.

சிலந்தியைச் சோழனாக்கினான்

பண்டொருகால் ஒரு சிலந்தி திருவானைக்கா எம்பெரு மாற்கு(ச் சிலந்திக்)கூடு கட்டி வழிபட்டு வந்தது. அப்பெரு மானை ஒரு யானையும் வழிபட்டு வரலாயிற்று. சிலந்தி கட்டும் கூட்டை அநுசிதம் என்று கருதிய யானை அக்கூட்டினை அழிக்க லாயிற்று. யானை தன் கூட்டினை அழித்தலைப் பொறாத சிலந்தி, யானையின் துதிக்கையிற்புக, யானை உயிர் நீத்தது. சிலந்தியின் உயிரும் பிரிந்தது; எனினும் சிலந்தி மறுபிறவியில் அரசனா யிற்று. அவ்வரசனே கோச்செங்கட் சோழன். இங்ஙனம் சிலந்தி சோழனானமையைத் திருநாவுக்கரசர்,

"சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவண் இறந்த போதே கோச் செங்கணானு மாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ ரட்ட னாரே"

என்று திருக்குறுக்கை வீரட்டானப் பதிகத்துப் பாடியுள்ளார். சிலந்தியைச் சோழனாக்கிய அருட்செயலை வியந்து போற்றினர்,

அந்நாட் பெருமக்கள்; இறைவனைச் சிலந்தியைச் சோழனுக்கினுன் என்று வாயார வாழ்த்தினர்; திருவானைக்காவில் ஒரு தோப்புக்குச் சிலந்தியைச் சோழனுக்கினுன் திருத்தோப்பு என்றும் பெயரிட்டனர். இது 'தேர்போல்' என்று தொடங்கும் குலசேகரபாண்டியனுடைய மெய்க்கீர்த்தியுள்ள அவ்வரசனது 10-ஆவது ஆட்சியாண்டுக்குரிய திருவானைக்காக் கல்வெட்டில் காணப்பெறுகின்றது (25 of 1891; 426 of vol. IV). அத்தோப்பு ஒரு நிலத்துக்கு எல்லை கூறுங்கால் கூறப்பெற்றுள்ளது. அக்கல்வெட்டுப் பகுதி பின்வருமாறு:—

"இவர்க்கு விற்றுக் குடுத்த நிலமாவது: உள்ளூர் திருப்புடை புது விளாகத்துச் சிலந்தியைச் சோழனுக்கினுன் திருத்தோப்புக்கு நீர்பாய்கிற வாய்க்காலுக்கு மேற்கு."

நல்ல நாமம் உடையான்

ஷ கல்வெட்டில் கையெழுத்து இட்டவர்களுள் ஒருவர் நல்ல நாமம் உடையான் எனப்பட்டார். நல்ல நாமம் உடையான் என்பது சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானுடைய திருநாமங்களில் ஒன்று திருவைந்தெழுத்து ஆகும். "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்" "எந்தையார் திருநாமம் நமச்சிவாய" என்ற அப்பர் வாக்கே இதனை வலியுறுத்தும். இத்திருப்பெயரையே நல்ல நாமம் என்று அப்பர் பின்வரும் பாடலிலும் கூறியுள்ளார்.

"கல்லி னேடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினுல்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே."

நல்லநாமம் உடையவர் சிவபெருமான் என்பது இப்பாடலாற் போந்தமையின், 'நல்ல நாமம் உடையான்' என்ற பெயரை மக்கள் தம் பெயராகப் பூண்டு மகிழ்ந்தனர் என்பது போதரும்.

ஆதிச்செல்வன்

திரு ஆனைக்கா–திருக்குறுந்தொகையில், "ஆதியாயிடும் ஆனைக்கா அண்ணலே" என்றும் திருத்தாண்டகத்தில், "திரு

வானைக்காவுடைய செல்வா" என்றும் அப்பர் பாடியுள்ளார். இவ்விரு திருமுறைச் சொற்களையும் சேர்த்து ஆனைக்கா இறைவனை "ஆதிச்செல்வன்" என்று வழங்குவராயினர் முன்னாட் பெருமக்கள். அன்னோர் அப்பெயரைத் திருவானைக்கா பொக்கிஷத்துக்கும் "ஆதிச்செல்வன் பண்டாரம்" என்று இட்டனர். இப்பெயர் வீரராம நாதனது சாஸனத்திற் கண்டது (26 of 1891; 427 of Vol. IV) (முன் தலைப்பில் கூறிய) நல்ல நாமம் உடையானோடு அக்கல் வெட்டில் கையெழுத்து இட்டவர்களுள் ஒருவன் ஆதிச் செல்வ வேளான் எனப் பெற்றான். அக்கோயில் நாயகம் ஆதிச் செல்வன் வயிர மாராயன் என்ற பெயருடையவன்.

என்னானைக்கன்று

மேலே கண்ட போசள மன்னன் வீரராமனாதனது சாஸனத்தில் என்னானைக் கன்று பட்டன் என்று ஒருவன் குறிக்கப் பெற்றுள்ளான். இவன் "திருவானைக்காவுடைய நாயனாரைப் பூசிக்கும் திருவெள்ளறை காச்யபன் என்னானைக் கன்று பட்டன்" என்றமையால், இவன் திருவானைக்கா இறைவனைப் பூசை செய்யும் சிவப் பிராம்மணன் என்றும், திருவெள்ளறை என்ற ஊரவன் என்றும், காச்யப கோத்திரத்தவன் என்றும் அறியலாம். திருநாவுக்கரசர் திருவானைக்காவில் பாடிய திருத்தாண்டகத்தில் இறைவனை என்னானைக் கன்று என்று குறிப்பிட்டார். திருநாவுக்கரசர் தேவாரத்தில் திளைத்த இவர் பெற்றோர் அதனையே இவர்க்குப் பெயராக இட்டனர் போலும்! அத்திருத்தாண்டகம் இதோ :—

முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னானை யாப்பண்ணி ஏறி னானைச்
சார்தற் கரியானைத் தாதை தன்னை
என்னானைக் கன்றினையென் ஈசன் தன்னை
எறிநீர்த் திரையுகளுங் காவி ரிசூழ்
தென்னானைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

THE POTTER SAINT

By

Prof. E. S. Varadaraja Iyer.

—<O>—

Three out of the sixty three canonized Saiva Saints have been extolled by Pattinathar, the renouncer par excellence-and one of them is Tiruneelakantar. He came of the potter caste and was so named because of his fascination and respect for the Blue neck of Siva, which was solely responsible for saving the celestials from being killed by the venom that emanated from the mouth of Vasuki when the sea of milk was churned. He had profound respect for Saiva devotees and made a free gift to them of the begging-bowl or Tiruvodu, which he made. The saint freely indulged in love affairs. One day when he returned after a stay in the house of a street girl and approached his legally wedded wife with intent to touch her, the woman got wild and prevented him from having anything to do with her, swearing by the word

---

முன் பக்கத் தொடர்ச்சி.)

முடிப்புரை

திருவானைக்கா கல்வெட்டுக்களில் ஆரம்பூண்டான்* என்று ஒரு பெயர் காணப்பெறுகின்றது. இஃது "ஆரநீரோடேந்திஞன் ஆனைக்காவு சேர்மினே" என்ற சம்பந்தர் வாக்கையும், "தாரமாகிய பொன்னி" என்ற சுந்தரர் தேவாரத்தையும் நினைப்பிக்கும். ஏகநாயகநம்பி என்ற பெயர் சேந்தனார் திருவீழிமிழலைத் திருவிசைப்பாவை நினைப்பிப்பதாகும். இனித் திருவானைக்காத் திருத்தலத்தில் இருந்த ஒரு நந்தவனத்துக்குச் சிறுத்தொண்டர் நந்தவனம் என்று பெயரிட்டிருந்தனர் எனின் முன்னாட் சான்றோரின் சைவ சமயப் பற்றினை என்னென்பது?

---

* "ஆரம்பூண்டான்" என்ற தலைப்பில் நான் எழுதியதைக் "கல்லெழுத்துக்களில்" என்ற நூலுட் காண்க.

"Tiruneelakantam" which she well knew was very dear to his heart. Here she used the honorofic singular 'EMMAI'. The saint thereon told her promptly that he would not touch thereafter either her or the woman folk as a class. After this altercation they did not choose to part from each other; on the other hand they lived in the same house as husband and wife, but without physical contact and no one, not even the next-door neighbour knew what transpired. Thus they grew old with conjugal affection abated but with their devotion to Siva unabated. Now, lord Parameswara in order to show to the world the greatness of the devotee, assumed the form of a Siva Yogi. He wore a coarse cloth, smeared his frame with sacred ash and appeared before the saint with his sacred thread, beads and a winning and cunning smile. The saiva saint welcomed him and asked him what brought him there. The Yogi told him that he wanted to place his own bowl with him, adding that the bowl was a unique one capable of purifying anything that came into contact with it and that it should be safeguarded as gold or gems. The saint received it and placed it in the house-ofcourse in a safe corner. The Yogi theron took leave of him and went to his golden hall.

Years rolled on. The Yogi who contrived to conceal the bowl he entrusted to the saint, came to his abode one day and claimed the same as he was the all powerful creator privileged to give and take what ever he wants. The saint went inside but could not find it. So he returned and informed the Yogi that he could not trace the same in spite of a thorough search and that he was prepared to give him a better one instead. The Yogi retored that he would not receive anything but the mud bowl he placed with him. and

that if he did not give it he would take the law of him. The saint said in all earnestness that he did not steal the bowl and pleaded innocence. The Yogi thereon asked him to take his bath, holding the hand of his son in the tank, if in fact he was really not guilty. When the saint informed him that he had no son, the Yogi ordered him to hold the hand of his wife and bathe in the tank. The saint rejoined that owing to an irredeemable oath, he could not do so. The Yogi's suspicion was roused and he had no other alternative but to drag him on to Thillai to present his plaint before the Antanars there. The learned Dikshatas listened to the plaint and declared that he should bathe in the tank as required by the Yogi, if he had really lost it. Poor Tiruneelakantar, non-plussed as he was and being unable to place before the public what transpired between him and his life-partner took them to the tank and asking his wife to hold the end of a stick bathed in the tank, he himself catching hold of the other end. LO! a miracle both of them rose up with the revival of youth in them and it seemed they had another flower bath in the flowers showered on them by the sages and the celestials. While everyone stood aghast at the transformation, Lord Siva appeared before them on the Rishapa with his consort. Now there arose the words from Asariri in praise of the saint and his wife, who mastered continence and who were blessed with perpetual youth hood. The tank in which the saint and his wife had their bath, has been since known as ILAMAIYAKKINAR KULAM and one can find even now on its bank Tiruneelakantar and his wife standing, holding the twin ends of a stick.

காளிதாசன் காட்டும் சிவபக்தி

பேராசிரியர், திரு. பெ. திருஞான சம்பந்தம், M. A., L. T.
வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி,
சென்னை.

காளிதாசன் உலகக் கவிஞர் வரிசையில் முன்னணியில், நிற்பவன், கவிஞன் மட்டுமல்ல, சிறந்த சிவபக்தனும் கூட. தனது பெருங்காப்பியமாகிற குமார சம்பவத்தில் பார்வதியின் தவத்தை வர்ணிக்கின்ற பகுதி காவியப் பண்பும் பக்திரசமும் கூடுகின்ற கூடல். அதில் மூழ்குவோர் அழகையும் இன்பத்தையும் மட்டும் காண்பவரல்லர் தூயசிந்தையராதலும் துணிபு. அதில் சிறிது துழாவுவோம்.

இமவான் மலையரசன். அவனது அருமைப் புதல்வி பார்வதி. ஐசுவரியம் அனைத்தும் நிரம்பிய அரசனின் குமரி. வேண்டிய வேண்டியாங்கு துய்க்கும் வாய்ப்பினள். இருந்தும் உடலை வருத்தித் தவம் புரிகிறுள் சிவபெருமானை மணுளனுக அடைவதற்கு. கடுங்கோடையில் நாற்புறமும் தீ சூழ, மேலே கதிரவன் காயக் கடுந்தவம் புரிகிறுள். குளிர் காலத்தில் கழுத்தளவு நீரில் அமிழ்ந்து நோன்பிருக்கிறுள். இருந்தும் எம்பெருமானுய சிவன் அவளது காதலின் உறைப்பைப் பரிசோதிக்க எண்ணிப்போலும் பிரமச்சாரி வேடந்தாங்கிப் பார்வதி தவம் பெருக்கும் இடத்திற்கு வருகிறுர். வந்து சில விஞக்களை எழுப்புகிறுர் பார்வதி தேவியை நோக்கி.

'அம்மா, நீ விரும்பும் அந்த மகேசுவரனை நான் அறிவேன். நீ முன்பு அவனுக்குப் பணிவிடை புரிந்தபோது காமனைக் காய்ந்து

1966 ஜனவரி மாத 'திருக்கோயில்' பத்திரிகையில் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

உன்னை மறுத்தவன் தானே, அவனைப் பின்னுமா விரும்புகிருய்? அவனைப் பற்றி நான் நன்கு அறிவேனுகையால் உன் விருப்பம் சரியென்று நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. ஏன் அவனிடத்திலே என்ன குறை என்கிருயா? நீ அவன் கையைப் பிடிக்க எண்ணுகிருயே. அவன் கையில் என்ன இருக்கிறது தெரியுமா? பயங்கரமான பாம்பையே கங்கணமாக அணிந்திருக்கிருன் அவன். நீ எப்படித்தான் பாணிக்ரஹணம் செய்வாயோ!'

'அம்மா, நன்ருகச் சிந்தித்துப் பார். நீ உடுத்தப்போவது அன்னப்புள்ளின் உருவம் பொறிக்கப்பட்ட பட்டாடை. அவன் உடுப்பதோ அருவருக்கத்தக்க ரத்தத்துளிகள் சொட்டிக்கொண்டிருக்கும் யானைத்தோல். நீ இருப்பது எல்லாப் போகப் பொருள்களோடும் கூடிய அரண்மனை. உன் மெல்லிய பாதம் நோகக் கூடாதென உன் தந்தை நீ உலவுமிடமெல்லாம் மலர்களைத் தூவச் செய்திருக்கிருர். ஆனுல் நீ வரித்துள்ள கணவனே, அப்பப்பா! மயிர்கள் சிதறிக் கிடக்கும் மயான பூமி! நீயும் பிறகு அங்குதான் போய் வசிக்க நேரிடும். உன் விரோதிகூட இத்தகைய நிலை உனக்கு ஏற்படுவதை விரும்பமாட்டான். உன் நலத்தில் நாட்டங்கொண்ட நான் இக் கோரிக்கையை எப்படி ஒப்பமுடியும் இன்னும் கேள்.'

'அவன் முக்கண்ணன். இதைக் காட்டிலும் விகார உருவம் வேறென்ன இருக்கமுடியும்? சந்தனக் குழம்பு பூசிய உன் திருமேனியிலே அவனுடைய மார்பிலுள்ள சாம்பரா படிவது? ஐயோ பாவம்! மற்ருெரு வேடிக்கையைக் கேள். நீ திருமணம் புரிந்து கொண்ட பின்னர் தம்பதியராய் இருவரும் ஊர்வலம் வரவேண்டும். அப்போது அவருக்கு நல்ல வாகனம்தான் ஏதாவது உண்டா? உன் தந்தை உனக்கு நல்ல கம்பீரமான யானையை அளிப்பார். அவருக்கோ அந்தக் கிழ மாட்டைத் தவிர வேருென்றுமில்லை. உங்கள் இருவரையும் இந்தக் கோலத்திலே கண்டால் மக்கள் கைகொட்டிச் சிரியாரோ?'

'முன்னமேயே உலகத்திற்கோர் அழகிய சந்திரன் அவருடைய சடையிலே சிக்கிக்கொண்டு பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கிருன். நீயுமா அவன் கைப்பிடியில் சிக்கிக்கொண்டு அந்நிலைக்காளாக வேண்டும்?'

'கணவன் அழகனுக இருக்கவேண்டுமெனப் பெண் விரும்பு வாள். மாப்பிள்ளை பணக்காரரா என்று பெண்ணின் தாய் பார்ப் பாள். அவர் படித்தவரா என்று தந்தை சிந்திப்பார். நற்குலத் தவரா என்று உறவினர் ஆராய்வார். பிற மக்கள் அவர் வீட் டிற்குப் போனுல் அறுசுவை உணவு கிடைக்குமா என்றே எண்ணுவார்கள். இது உலகியல் வழக்கு. நீ விரும்பும் கண வனே முக்கண்ணனுகிய குருபி. அவருக்குக் குலம் கோத்திரம் இல்லை. உடுக்க நல்ல உடையாவது உண்டா என்ருல் கோவ ணுண்டி. அதிலிருந்தே அவன் செல்வ நிலையை உணரலா மன்ருே? விரும்பத்தக்க அம்சம் ஏதேனும் ஒன்ருகிலும் இருக் கிறதா பார்? என்று சாதுரியமாகப் பேசி முடிக்கிருர் பிரம்மசாரி வேடத்தில் வந்திருந்த சிவபெருமான்.

சிவபெருமானிடத்தில் முதிர்ந்த பக்தி, அயராத அன்பு கொண்டிருந்த பார்வதிக்கு இச்சொற்களைக் கேட்டுக் கோபம் ஏற்படாமல் என்ன செய்யும்? உதடு துடிக்கிறது. புருவம் வளை கிறது. கண்களில் சிவப்புரேகை படர்கிறது. பிரம்மசாரி பேசிய ஒவ்வொரு சொல்லுக்கும் ஆணித்தரமாக பதில் சொல்கிருள்.

ஐயா பெருமானைப் பற்றிய தத்துவங்களை நீர் அறியாமல், பிதற்றுகிறீர். சிவநிந்தை செய்கிறீர். உலக நிலையில் நின்று அவரைக் கருதுவது பொருந்தாது. இந்நிலையை எல்லாம் கடந்த வர் அவர். அவருடைய செயல்களுக்குக் காரணம் காண்பது எளிதன்று. அது நம் சிற்றறிவிற்கு அப்பாற்பட்டது. இதை அறியாத பேதைகள் அத்தகைய மகாத்மாக்களுடைய செயலை நிந்திக்கிருர்கள்.'

'அவரிடத்தில் மங்கலப் பொருள் இல்லை என்கிறீரே. அது யாருக்குத் தேவை? உலகியலில் உழலும் மக்களுக்குத் தீமை யைத் தவிர்க்கவும் நலத்தைப் பெருக்கவும் மங்கலப் பொருள் தேவை. பற்றற்ற பரம்பொருளுக்கு வேண்டுதல் வேண்டாமை யிலானுக்கு, உலகிற்கே அடைக்கலம் தருகின்ற பரமனுக்கு மங்கலப் பொருள் எதற்கு?'

'அவருக்குப் பொருள் இல்லை என்கிறீர். உலகிலுள்ள ஐசு வரியமனைத்தும் அவரிடமிருந்து தோன்றியதென்பதை அறிய

மாட்டீர் போலும். மயானத்தை உறைவிடமாமாகக் கொண்ட வன் என்கிறீர். மூவுலகிற்கும் முதல்வன் அவன் என்பதை அறியமாட்டீர் போலும். பயங்கர உருவம் படைத்தவர் என் கிறீர். அவருடைய பெயரே சிவம் என்பதை உணரீரோ? சொல்லப்போனால் அவருடைய உண்மைத் தத்துவத்தை விளங் கிக்கொண்டவர் உலகில் இல்லை எனலாம்.'

'அழகிய அணி பூண்டவராயினும் சரி, பாம்பணி கொண் டவராயினும் சரி, கரியுரி போர்த்தியவராயினும் சரி, பட்டாடை உடுத்தியவராயினும் சரி, மண்டையோடு அணிந்தவராயினும் சரி தூவெண்மதி சூடியவராயினும் சரி, அஷ்டமூர்த்தியான அவருடைய உருவத்தை யாரே இத்தகையன், இவ்வண்ணத்தன் என்று இயம்புதல் கூடும்!'

'அவரது திருமேனியைத் தீண்டிய சாம்பர் நமது ரஜோ குணத்தைப் போக்கவல்லவது. நடராஜப்பெருமான் ஆனந்தத் தாண்டவம் புரியும் போது அவர் திருமேனியினின்றும் தெறித்த திருநீற்றுப் பொடியை இந்திராதி தேவர்கள் தமது சிரசில் அணிவதை நீர் எப்படி அறிவீர்? கிழ எருது அவரது வாகனம் என்று சொன்னீர்? ஐராவதத்தில் பவனிவரும் இந்திரனே நீர் சொல்லுகின்ற அந்த கிழட்டுக் காளை மீது வரும் 'ஏழைச் சிவ னின்' திருவடியைத் தனது சிரத்தின் மீது தாங்குவதை நீர் எப்படி அறியப்போகிறீர்?'

'உம்முடைய பிதற்றல்களுக்கிடையே ஓர் உண்மையையும் சொல்லிவிட்டீர்! அவருடைய பிறப்பு, குலம் இவை பற்றி எது வுமே தெரியாதே என்றீர். எல்லாவற்றையும் தோற்றுவிக்கும் பிரமனுக்கும் காரணமாயிற்றே அவன். அவனுக்குப் பிறப்பு எங் ஙனம் இருக்கமுடியும்? தோன்றிய குலம் என்று ஒன்று எப்படி இருக்கமுடியும்?' என்று வாதிட்டாள் பார்வதி.

பிரமச்சாரியின் உதடு சிறிது அசைந்தது. அவர் மீண்டும் வாதிப்பார் போல் தோன்றியது. அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறாள் பார்வதி. பாரமார்த்திக விஷயத்தை வாதம் செய்தே முடிவு கட்டுவது முடியாதல்லவா? மீண்டும் அந்த பிரமச்சாரி பழிச்சொல் பேசுவதையும், அதைக் காது கொடுத்

துக் கேட்கும் பாவத்தைத் தான் ஏற்கவேண்டி வருகின்ற நிலையையும் தவிர்க்க எண்ணிய பார்வதி, 'போதும் ஐயா உமது கலகப் பேச்சு. நீர் சொல்லுவது உண்மையாக இருந்தாலும் இருந்துவிட்டுப் போகட்டும். என்னுடைய உள்ளம் இறைவனைப் பற்றிய உணர்வில் கனிந்துவிட்டது. மனச்சாட்சிக்கேற்ப நடப்பவர்கள் பழிச்சொல்லுக்கு அஞ்சத் தேவையில்லை. நானும் அஞ்சப்போவதில்லை' என்று உறுதியுடன் கூறிவிட்டுச் சரேலென அப்பால் நகர்ந்து செல்ல முயன்றாள்.

பார்வதியின் முதிர்ந்த அன்பைக் கண்டுகொண்டார் இறைவன். இடபாருடராய்ப் புன்முறுவல் பூத்த முகத்துடன் பார்வதியை அணுகிக் கரம் பிடித்தார்.

இத்திடீர்த் திருப்பத்தை எதிர்பாராத பார்வதி நடுக்குற்றாள். வியர்வை அரும்பிற்று அவள் முகத்தில், தன்னை விடுவித்துக்கொண்டு அடிஎடுத்து வைக்க முற்பட்டாள். அன்பும் நாணமும் போட்டியிட இருக்கவும் முடியாமல் நகரவும் முடியாமல் தயங்கினாள். திடீரென மலை எதிர்ப்பட்டால் ஓடுகின்ற நதி மேலே செல்லவும் முடியாமல், செல்லாமல் நிற்கவும் முடியாமல் எப்படித் தத்தளிக்குமோ அப்படித் தத்தளித்தாள் பார்வதி என்று வர்ணிக்கிறான் காளிதாசன்.

இறைவன், 'பெண்ணே! உன் தவத்திற்கு நான் அடிமையாகி விட்டேன். இன்று முதல் நான் உன் தாசன்' என்று திருவாய் மலர்ந்தருளினார். 'பக்திவலையிற் படுவோன்' அல்லவா இறைவன்.

முத்திதரும் தலங்கள்

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்—சிவபோகசாரம்.

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 17, இதழ் 1-ன் தொடர்ச்சி]

III

SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

THE third of these hymn-writers, named in full Sundaramurti Swami, was, like Sambandar, a Brahman. He was born in the South Arcot District, and is generally believed to have flourished in the first quarter of the ninth century A. D. He evidently sat loose to caste scruples, for neither of his two wives was a Brahman. One was a dancing-girl in the Saivite temple at Tiruvarur, the modern Tiruvalur in the Tanjore District, while the other was a Velala woman of Tiruvottiyur, now a suburb of Madras. His life seems to have been no happier than life in polygamy usually is, and to add to his difficulties he sometimes found himself without food for his ladies to eat. He frankly praised God for what he could get, and on the whole his hymns are on a lower spiritual plane than those of the first two writers, though there are some which bear the marks of real spiritual experience. Of the sixty-three saints whom Saivites hold in special honour, Sundarar seems to have been the last, for he sang the praises of the other sixty-two.

Sundarar, as our first sample of him shews, was not only later than the two authors whom we have been studying; he was the last of the sixty-three canonized saints of Saivism. A serious weakness of the religion here shews its head. Siva has his favourites, who can do no wrong. The stanza is given in prose, for these names cannot fit into any English metrical line. The first two will be recognised as names of the poets whose work we have been considering. Nalaippovan is Nandan, the pariah saint. Silandi (= spider) is Kochchengat Chola, who figures largely in early Tamil history.

65. நற்றமிழ்வல்ல ஞானசம்பந்த
ஞவினுக்கரையஞளைப் போவானுங்
கற்றசூதனற்சாக்கியன்சிலந்தி
கண்ணப்பன்கணம்புல்லனென்றிவர்கள்
குற்றஞ்செய்யினுங்குணமெனக்கருதுங்
கொள்கை கண்டுநின்குரைகழலடைந்தேன்
பொற்றிரண்மணிக்கமலங்கள்மலரும்
பொய்கைசூழ்திருப்புன்கூருளானே.

65. Nanasambandar and Tirunavukkatasar skilled in the Tamil tongue, Nalaippovan, learned Sudan, Sakkiyan, Silandi, Kannappan, Kanampullan, these may do wrong, but yet Thou count'st it right. Hence have I come to the sounding anklets of Thy feet, O lord of Tiruppungur with its pools where blossoms many a golden lotus gem.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

மூவர்க்கு மூத்தவன்

'பாலகவி' வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
(தத்புருஷ தேசிகர்) தேவகோட்டை.

ஆன்மாக்களின் உய்தி கருதி ஆண்டவன் செய்து வருகின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களும், படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களில் அடக்கிப் பேசப்பெறும். உயிர்களைக் கன்ம நுகர்ச்சிகளில் ஈடுபடுத்துகின்ற மறைத்தல் தொழில், காத்தற் காலத்தில் நிகழுவதாதலின் அதனைக் காத்தலிலும், உயிர்களுக்கு அநுக்கிரகம் செய்து ஆட்கொள்ளுவதாகிய அருளல் தொழில் அழித்தலின் பின்னர் நிகழுவதாதலின் அதனை அழித்தலிலும் அடக்கிக் கூறுவது மரபு.

முத்தொழிற் கருத்தர்களாகிய பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் சம்புபட்சம், அணுபட்சமாகிய இருவகைப் பட்சங்களிலும் உள்ளவர்களாவார்கள். சம்பு பட்சமென்பது கடவுள் வகையும், அணுபட்சமென்பது உயிர்வகையும் ஆகும். உயிர் வர்க்கத்தினராகிய பிரமன் முதலியோர், தேவர்களுள் ஒவ்வொருவராக வைத்தெண்ணப்பெறுவர். கடவுள் வர்க்கத்தினராகிய பிரமன் முதலியோரது திருவுருவங்கள், சிவபெருமான் ஒருவரே கொள்ளுகின்ற வெவ்வேறு வகைப்பட்ட வடிவங்களையும் தொழில்களையும் உடையன.

சிவாகமங்கள் சிவபெருமானது உருவத் திருமேனிகள் நான்கு என்று கூறி, அவை மகேசுவரன், உருத்திரன், திருமால், நான்முகன் என்று குறித்தன. "திகழுமீசன், உவந்தருளுருத்தி ரன்ருன் மாலயனென்றி னென்ருய்ப் பவந்தரும்" என்பது சிவஞான சித்தியார். சம்புபட்சப் பிரமன் முதலியோரைக்

"காரணேசுவரர்" என்றும், அணுபட்சப் பிரமன் முதலியோரைத் "காரியேசுவரர்" என்றும் ஞான நூல்கள் கூறுகின்றன. இங்ஙனம் இருவகைப்பட இருக்கின்ற வேறுபாடுடைய பட்சங்களை அறியாதவர், இரண்டையும் ஒன்றெனமயங்கித் தாம் குழப்பமடைவதோடமையாது மற்றவர்களையும் பெருங் குழப்பத்தில் அழுத்தி வருகிறார்கள்.

தேவார திருவாசக முதலிய அருள் நூல்களில் இவ்விரு வகைப்பட்ட மும்மூர்த்திகளும் பல இடங்களில் குறிக்கப் பெறுகின்றனர். சம்பு பட்சத்திலுள்ள பிரமன், திருமால், உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளும் திருஞான சம்பந்தப் பிள்ளையாரருளிய திருச்சிவபுரத் திருப்பதிகத்தில் முறையே

"சுரர் முதலியர்
திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு
பதுமநன் மலரது மருவிய
சிவன்" எனவும்;

"உலகுகள்
நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகட னடுவறி துயிலமர்
அரியுரு வியல்பரன்" எனவும்;

"உயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு
முதலுரு வியல் பரன்"

எனவும் குறிக்கப் பெறுகின்றார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகளருளிய ஆதிபுராணத் திருக்குறுந்தொகையில் உள்ள

"செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட் கேறுமோ
அத்த னென்றறி யோடு பிரமனும்
துத்தி யஞ்செய நின்றநற் சோதியே"

என்னும் திருப்பாசுரம் "திருமாலுடன் பிரமன் கூடித் தலைவ னென்று துதிக்கும்படி நின்ற சோதிப் பிழம்பு சிவபெருமா னென்பது, செத்துச் செத்துப் பிறக்கின்றவர்களைத் தெய்வ மென்று கொண்டு பத்தி செய்கின்ற பாறை நெஞ்சர்களுக்குப் புலப்படாதென அறிவிக்கின்றது. பசு இலக்கணம் பிறந்திறந் துழலுவதென்பதும் பதி இலக்கணம் அவற்றுட்படாதுயர்ந் திருத்தலென்பதும் வேதாகமங்களுக்கு ஒப்ப முடிந்த உண்மை களாகும்.

சிவபெருமானின் வேறல்லாத முருகப்பெருமானது திருவடி களில் அன்பு பூண்டொழுகிய அருணகிரிநாத சுவாமிகள் தமது கந்தரனுபூதியில்

"செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்"

என்று அருளிச் செய்திருப்பதும் ஓதாதுணர்ந்த மாதவராகிய குமரகுருபர சுவாமிகள் தமது முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழில்

"செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள
யெங்கீரை யாடி யருளே"

என்று அருளிச் செய்திருப்பதும் இங்கே நினைவு கூர்தற்குரியன வாகும்.

சாவா மூவாத் தலைவனாகிய சிவபெருமானொருவனே படைத் தலாதிய ஐந்தொழில்களுக்கும் சுதந்தர கர்த்தா என்பதும் அவனே அவ்வத் தொழில்களைச் செய்யும் பொருட்டுப் பிரமன் முதலிய அவ்வவ் வடிவங்களை மேற்கொண்டு முதற்கண் நிற்பா னென்பதும் பின்னர் அவனால் நியமிக்கப்பெற்ற பிரமன் முதலி யோர் அவ்வவ் வடிவங்களை உடையராய் அவ்வத் தொழில் களைச் செய்து வருவாரென்பதும் ஞான நூல்களால் அறியப் பெறுவனவாகும்.

காரணேசுவரராய்ப் பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய திருவுருவங்களைக் கொண்டு படைத்தளித்தழிக்கின்ற பரம்

பொருளாகிய சிவபெருமான், காரியேசுவரராகிய முந்நீர்த் துயின்றவனும் நான்முகனும் அறியப் பெருதவர் என்னும் உண்மையைத் திருஞான சம்பந்த சுவாமிகள் திருவெழு கூற்றிருக்கையாகிய ஒரு திருப்பதிகத்திலேயே முன்னும் பின்னுமாக

"படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை" எனவும்,

"முந்நீர்த் துயின்றோ னுன்முக னறியாப்
பண்பொடு நின்றனை"

எனவும் உணர்த்துவாராயினர்.

தெய்வப் புலமைச் சேக்கிழார் சுவாமிகள் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணத்தில் அத்திருத்தொண்டரை

"காரணபங் கயமைந்தின் கடவுளர்தம் பதங்கடந்து
பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத்
தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார்"

என்று குறிப்பிடுகின்றார்கள். இங்கே கூறப்பெற்ற காரணக் கடவுளரே, சிவாகமங்களில் "காரணேசுவரர்" என்று குறிக்கப் பெறுகின்ற சிவபேத மூர்த்திகளாவர். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களிலும் காரணேசுவரராகிய சிவபெருமானொருவரே, விநாயகர், பிரமன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய திருவுருவங்களுடன் வீற்றிருந்து அருள் புரிகின்றார். இங்கே இவர் ஆதார சிவன் என்று குறிக்கப் பெறுவார். ஆக்ஞைக்குரிய இடமாகிய புருவ நடுவுக்கு மேல் பிரமரந்திரத் தானத்தில் விளங்கும் பரசிவம் அதையுங் கடந்த துவாத சாந்தத் தானத்தில் வீற்றிருக்குங்கால் நிராதார சிவன் என்று போற்றப் பெறுவார்.

சிவபேதமாகிய விஷ்ணு மூர்த்தியே சிவாகமங்களிலும் திருமுறைகளிலும் சிவசத்தியென்று குறிக்கப் பெறுகின்றார். இதனை உணராமல் சிவ விஷ்ணுவை அவை குறிக்கின்றன வென்று அநேகர் மயங்கிக் கூறி வருகின்றார்கள்.

"ஏகைவ சக்தி: பரமேஸ்வரஸ் யபிந்நா சதுர்த்தா விநியோக காலே
போகே பவாநீ புருஷேஷு விஷ்ணு:
கோபேது காளீ சமரேது துர்க்கா"

என்ற சிவாகமமும் இதனோடு ஒற்றுமையுடைய

"மாதொருபாலு மாலொரு பாலு மகிழ்கின்ற"
"மண்ணுமோர் பாகமுடையார் மாலுமோர் பாகமுடையார்"
"அரியலால் தேவியில்லை ஐயனை யாற னூர்க்கே"

என்ற திருமுறைகளும் இது பற்றிய உண்மையை வலியுறுத்துவனவாகும்.

இதுகாறுங் கூறியவற்றால் பெயரொற்றுமை ஒன்றை மட்டும் கொண்டு சிவப்பிரம விஷ்ணுவாதி தேவர்களைச் சிவப்பிரம விஷ்ணுவாதி தேவர்களோடு ஒப்ப வைத்தெண்ணுவது அறியாமையே என்பது நன்கு புலப்படும். இனிச் சம்பு பட்சத்திலுள்ள சிவபேத மூர்த்திகளாகிய பிரம விஷ்ணு ருத்திரர்கள் தம்முட் சமமானவர்களென்பதும் தடத்த வடிவங்கொண்டு திருமேனிகளைத் தாங்கி சகளமாய் வரும் சிவபெருமானது பின்னிலைக்கு முன்னிலையாய் அவனது சொரூபத் திருமேனி நிட்களமாய் உள்ளதென்பதும் உணரத் தக்கனவாம். சொரூப நிலையில் இறைவனே, தடத்த நிலையில் ஒன்றாகவும் உடனாகவும் இருக்கின்றானென்னும் பேருண்மை இங்கே நினைவு கொள்ளத் தக்கது.

(தொடரும்)

உ
திருச்செந்திலாண்டவன் துணை

'குமரகுருபரன்'

திங்கள் வெளியீட்டின் சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு:

தனிப்பிரதி (உள் நாடு)	0–19 ந. பை.
வருடச் சந்தா	ரூ. 2–25 ந. பை.
வெளி நாடு வருடச் சந்தா	$7\frac{1}{2}$ ஷிலிங் அல்லது ரூ. 4–88 ந. பை.

நிர்வாக ஆசிரியர்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Tiruttondattogai.

திருத்தொண்டத்தொகை: பண்: கொல்லிக்கௌவாணம்

திருவாரூர்

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

I am the slave of Eribattar, the warrior with a spear, and unto the slaves of Enathi Natha Nayanar. I am the slave of the hunter, Kannappar, the master of many faculties: and I serve the slaves of Kalayan of Kadavur.

I am the servant of the devotees of the warrior-Saint Manakkanjarar and untiring Val-Taya Nayanar. And the slave of Anayar am I, the servant of the Lord at Arur.

(To be continued)

பித்தவுலகில் பெருமக்கள்

சித்தாந்தச்செல்வர்:
திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தன் அவர்கள்
திருவண்ணாமலை.

உலக மென்ப துயர்பொரு ளெனினும்,
நிலையில் பொருளென நினைவில் கொள்வீர்!
எல்லாப் பொருளும் ஏற்புடைத் தெனினும்,
தொல்லை தந்தே நன்மை யூட்டும்,
அல்லல் மாஞாலம் அளவில் பெரியது;

அங்ஙனே ஆசையும் அளவிற் பெரியது,
கொள்ளு மாசை குறைவிலா நிறையினும்,
பற்றுக் கொள்வது பதமாய்க் கொள்வீர்!
பற்றுக் கொள்ளும் பெரும்பொரு ளாதெனின்?
உற்றறி வில்பெறும் உயர்பெரு வாண்டவன்!

வானாகி நின்று வளியான வனவன்;
ஊனாகி நின்று உயிராக வானவன்;
கோனாகி நின்று கோல்கொளா வாட்சியன்;
வானாகி நின்ற வானவர் பெருமனின்,
ஆமாறு திருவடிக் ககங்குழை யினல்லால்,

பூமாலை புனைந்திடின் பயன்பெறு தலென்னே!
பாமாலை சூட்டினும் பண்பு வளருமோ?
கோமா னில்லம் கோயில் புக்கினும்,
நாமெலாம் பெறுவது நலமொன்றிலது!
வாழ்த்தத் தந்தான் வாயை யெம்மான்!

சூழ்த்தத் தந்தான் சூழிடு கரங்களைப்
பாழ்த்த பிறவிப் போக்கிட வெண்ணின்,

உலகீ ரவன்பதம் உயர்த்திப் பரவுவீர்!
தவமே புரிமின்! தண்மலர் சூட்டுமின்!
அவமே போக்குமின்! அருவினை நீக்குமின்!

"சிவமே பெருந்திரு! சிந்திப்பின் திருவடி!
பவமே அருள்பெறும்; பாவம் தொலைந்திடும்,
அழுது வவனடி யடைந்த தெள்ளியர்,
பழுதறக் கூறியப் பொருளுரை தேர்மின்!
பிறப்பஞ்சா நெறியில் பாரிடை வாழ்ந்து,

இறப்பஞ்சா நெஞ்சில் இறைவனை யமைத்து,
தேனன்னான் மலர்ப்பதத் தேவனன்னான்,
மானன்னா னருள்பெற்று மயக்கந் தீர்வீர்!
நாடகத்தால் நடித்த நடுவடியார் பல்லோர்,
ஆடகத்தே கூத்தாடும் இடையருப் பெம்மானைப்,

பாடலால் வழுத்திப் பலநாள் பரவிடின்,
ஊடகத்தே நிற்க வுதவுவன் எம்மானே!
பாடுவீர் போற்றியே பரமன் பாதம்,
ஆடுவீர் எண்ணியே யணியம் பலத்தனை!
கூடுவீர் இப்புழுக் கூடு வுய்திட,

வீட பொய்யெலாம், வீடு பெறுவரே!
பொருத்த மின்றேல் பொங்குமாம் சினம்;
வருத்த மிக்கிடின் வஞ்ச மோங்கிடும்;
பணிந்தா லிறைவன் பிணிவினைதீர்ப்பன்,
அணிந்தால் பாதம் அடைவது மோனம்!

திணியார் மூங்கில் தீங்குள வினையீர்!
தணியார் பாதம் தயாபர னளித்தால்
பிணியாம் பிறவி பாழ்பட் டேகும்.
கனியா மண்ணல் கழியரு ளருள்வன்"
பித்த மகலும் போதையும் நீங்கும்!

பித்த வுலகில் பொற்புடன் வாழ்ந்த,
மெத்த நலந்திகழ் மேன்மைகொள் ளடியவர்,
சொல்லின் வேந்தர் சொற்பொருள்தேர்வீர்!

"இல்லக விளக்க திருள்தனைக் கெடுப்பது;
புல்லக விளக்கது பலருங் காண்பது;
சொல்லக விளக்கது சோதியுள்ளது;
நல்லக விளக்கது நமச்சி வாயவே!
குறிகள், அடையாளம், கோவி லூருணிகள்,
நெறிக, ளவன்வழி நின்ற நேர்மையும்,
அறிய வாயிர மாரண முழங்கினும்,
நெறியிலார் நெஞ்சில் நில்லா னீசன்!
விறகில் தீயினன், விளங்குபால் நெய்யன்,
மறைய நிற்போன் மாமணிச் சுடரோன்!
உறவுகோல் நாட்டி வுணர்வெனுங் கயிற்றால்
முறுகவே கடையின் முன்வந்து நிற்பனே!
நமச்சி வாயந்தான் நலந்தரு நாமம்!
இகழ்ச்சி செய்வோ ரிடரில் படுவர்.
நமச்சி வாயந்தான் நற்கல்வி ஞானமும்;
நமச்சி வாயந்தான் நானறி விச்சை;
நமச்சி வாயந்தான் நன்னெறி காட்டும்.
நெக்கு நெக்கு நினைந்திடிலீசன்;
புக்கு நிற்பன் பொன்னார் மேனியன்!
பொக்கங் கொள்வார் பூவும் நீரொடு,
வாழ்த்தி வாழ்த்தி வளமையாய்ப் போற்றினும்,
மறைய நிற்பவன் மாமணி வள்ளல்!
புதிய பூவினன், புண்ணிய நாதன்;
நிதியன், நீதியன், நித்திலக் குன்றன்,
மதியன், மைந்தன், நான்மறைக் காசான்!
துஞ்சும் போதும் சுடர்விடு மண்ணலை,
நெஞ்சுள் நிறுத்தி நீதியை யுணரின்,
நஞ்சு கண்டன் நம்பன் பெருமனை,
வஞ்ச நெஞ்சனும் வம்பிலா தடைவன்.
ஈசன் ஈசனென்று மரற்றுமின்!
ஈச னவனும் இணையிலா பதத்தோன்!
ஈச னவனை யினமனத் தமைக்கின்

ஈசனு மவனிடம் ஈட்டலா மருளை”!
“பண்ணிடைத் தமிழும், பழத்திடைச் சுவையும்,
கண்ணிடை மணியும், கருவிருட் சுடரும்,
எண்ணிடை யெழுத்தும் எழில்சே ரிலக்கியம்,
போன்றவன் பெருமன்! பொருப்புயர் செல்வன்”!

மண்ணிடைத் தோன்றும் மக்க ளிடரெலாம்,
எண்ணிடப் போக்குவன் ஏற்றநற் செல்வன்!
பித்த வுலகீர்! பிதற்ற லேனோ!
நித்த மவனை நினைமின் நீவிர்!
உத்தம வுள்ளம் உயர்வுபெற் றுளிரும்!

வாய்மை யோங்கும்; வளம்பல பெருகும்;
தூய்மை நிலவும்; துன்ப மகலும்;
மெய்மை சிறக்கும்; மேன்மை யோங்கும்;
ஊக்கம் சிறக்கும்; ஊனம் நீங்கும்;
வான்முகில் பெய்யும்; வள்ளல்கள் வாழ்வர்!

(தொடரும்)

★ திருவிசைப்பா ★

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

★ தெளிவுரை ★

புதிய பதிப்பு.

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு)

376 பக்கம் வெள்ளைத் தாள். தனிப் பிரதி அடக்க விலை ரூ.1-50,

ஒரேசமயத்தில் 20 பிரதிகளுக்கு மேல் வாங்குவோருக்கு 20% கழிவு.

(தபால் செலவு வேறு)

கிடைக்குமிடங்கள் :-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம். *(திருநெல்வேலி ஜில்லா)*

2. “தியாகராச விலாசம்”
53, பிள்ளையார் கோயில் தெரு; திருவேட்டீசுவரன்பேட்டை,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருவம்மானை

இனி, திருவம்மானை யான திருவருள் வினியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன; நாராயணன் முதலான தேவர்கள், இருடிகள், நாகர், மற்றுள்ளாரும் அறிவரிய பரமசிவன் பரத வேடரா யெழுந்தருளியதைக் கூறும் :—

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்*
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

(இ. ள்). பூமியிலுளராகிய இருடிகள் முதல் பெருஞ் சுவர்க்க பத இந்திரன் முதலோரும், பாதலத்திலுளராகிய நாகர் முதலி யோரும் மற்றுள்ள மூன்று மாயா புவன வாசிகளும் காண் பதற்கு ஊனக் கண்ணுக் கெட்டாத நாதன் அடியேன் போல் வார் கண்ணுக்கு எளிய வடிவுடைய பெருங்கருணையாளனுய்த் தட்சிண திசையே தன் திசையாக வுள்ளவன்; அத்திசையிலுள தாகிய திருவருட் பெருந்துறையிலெழுந்தருளிய பரமகுருவான சுவாமி, அடியேனை ஞானப்பித்தனுகச் செய்து, இனிப் பிறவா வழி அநுக்கிரகஞ் செய்து, எனதுள்ளமே கோயிலாகக் கொண்ட இன்ப அமிர்தாகி, சமுத்திரத்திலே வாழும் மச்சங்களைக் கருணை வலையால் வீசி அருளளிக்கும் பெரிய வின்பக் கடலான சுவாமி; அவரைப் பாடியாடுவீர்கள் அம்மானையை, ஞானப்பெண்களே!— என வருளியதை அன்பாற் காண்க.

* திருவிளையாடற் புராணத்தி ' 'வலைவீசின திருவிளையாடலைக்' காண்க,

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர். மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத் தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

The Rajah of Ramnad Memorial Feeding Charity at Varanasi

(Third Additional Endowment) Rs. 50,000/-

This endowment is founded by His Holiness Sila sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Sri Kasi mutt, Tirupanandal in memory of Srimath Bavani Sankararama Raja Sethupathi Kaththa Ragunatha Thevar Avl., Rajah of Ramnad who in the Salivahana Year 1646 (27th Ani, Keelaka) made free gift of the entire village of Thalirmarungur in Tiruvadanai Taluk of Ramnad District and executed a copper plate in favour of our revered Predecessor-in-Title Srilasri Kasi vasi Thillainayaga Tambiran Swamigal for conducting daily feeding charity at Banaras.

As the Government took over the village under the Estates Abolition Act of 1948 and reduced the Rents under the Rent Reduction Act of 1947, we founded an endowment No: 223 (வாரணாசியில் சேதுகாவலர் நினைவு அன்னம்பாலிப்பு) on 27-10-1956 for Rs5000/- with the interim compensation received in October 1956 for the daily feeding of Brahmins and Saivites in our Mutt at Banaras.

The Government have then sanctioned Rs 33034-29 under the Rent Reduction Act 1947 in G. O. MS. 1761 dated 26-4-1957 and with that amount an additional endowment (No. 243) was made in memory of the said Rajah of Ramnad for Rs 40,000/- on 18-9-1957 for conducting daily feeding charity (Brahmin feeding, Maheswara Pooja and Poor feeding) at Banaras.

The Government have afterwards sanctioned Rs 1,01,594-43 under the Madras Estates (Abolition & Conversion into Ryotwari) Act 1948-Under Section 38 (i) and 38 (ii) and deficiency to be made good to the institution under section 54 (2) in G. O. communicated in Collector's letter Roc. Z. 2. 12729/-65 dated 23-2-1965 cited in Roc. A. 5. 5400/-65 dated 24-5-1965 and 7-6-1965 of the Tahsildar of Tiruvadanai and out of this amount a sum of Rs 52,000/- has been utilised to make a second additional Endowment (No. 368) on 8-10-1965 in memory of the above said Raja of Ramnad for conducting daily feeding charity(Brahmin feeding & Maheswara Pooja) at Banaras. With the balance left after founding the above said endowment, **a third additional endowment** for a sum of Rs 50,000- is now made in memory of the above said Raja of Ramnad for conducting daily feeding charity (Brahmin feeding & Maheswara Pooja) with the interest derived from this capital in our Kumaraswami Mutt at Banaras in addition to the other feeding charities conducted according to the other endowments already made. The endowment shall be called "**The Raja of Ramnad memorial feeding charity at Varanasi - Third Additional endowment**".

2. The capital of this endowment is Rs. 50,000/- Rs Fifty thousand only and it is invested in 5½% Madras State Loan of 1977. Government Promissory Notes bearing No. 012953 for Rs. 10,000/- MS. 012954 for Rs. 10,000/-, MS. 012955 for Rs. 10,000/- MS.01256 for Rs. 10,000/- and MS. 012957 for Rs. 10,000/- Total Rs. 50,000/- The administration of the fund shall vest in us and our successors-in-interest.

3. The annual interest accruing on the capital shall be utilised for conducting daily feeding charity

(Brahmin feeding and Maheswara Pooja) in our Mutt at Banaras (Varanasi) in addition to the other feeding charities founded by us.

4. The feeding shall be conducted according to the Thitta Japtha (Budget) prepared by us and our successors-in-interest which will depend upon the interest accrued and the prices of commodities then prevailing.

5. The endowment will not be diverted to any purpose other than the one mentioned above. The capital may from time to time be invested in Government Securities or Fixed Deposits fetching high rate of interest. The capital shall always stand in our name and our successors in interest.

Tirupanandal
Dated 14-10-1965 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at the Tiruvadamarudhur Sub Registrar's Office on 6-10-1965 as No. 52 of 1965 of Book 4. Volume 53 pages 55 to 57.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத்தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்,

உள்நாடு ரூ. 3 - 00 * வெளிநாடு ரூ. 4 - 00

செயலாளர். "ஞானசம்பந்தம்" அச்சகம்.

தருமபுரம், மாயூரம் P. O.